சுருக்கம்

சட்டக்கல்வி – 2018–ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெறவுள்ள பன்னாட்டு மாதிரி நீதிமன்றப் போட்டிகள் – சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வரும் 7 மாணவர்களுக்கு, அரசின் நிதியுதவியாக தலா ரூ.1,00,000/– வீதம் மொத்தம் ரூ.7,00,000/- ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சட்ட (சக)த்துறை

அரசாணை (நிலை) எண்.70

நாள் 19.02.2018.
ஹேவிளம்பி ஆண்டு – மாசி – 7.
திருவள்ளுவர் ஆண்டு 2049.

படிக்கப்பட்டது:

சட்டக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண்.222/அ3/2017,
நாள் 15.11.2017 மற்றும் 07.12.2017.

* * * * *

ஆணை:

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வரும் மாணவர்கள் அக்கல்லூரியின் சார்பாக ஆண்டு தோறும் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற்று வரும் பன்னாட்டு மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்துகொண்டு வருகின்றனர். அப்போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு அரசின் நிதியுதவியாக மாணவர் ஒருவருக்கு தலா ரூ.75,000/– வீதம், மொத்தம் 7 மாணவர்களுக்கு ரூ.5,25,000/– வழங்கப்பட்டு வருகிறது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், சட்டக்கல்வி இயக்குநர், கடந்த ஆண்டுகளைப் போலவே நடப்பாண்டிலும் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயிலும் 7 மாணவர்கள் அக்கல்லூரியின் சார்பாக 2018–ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெறவுள்ள பன்னாட்டு மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். மேலும், மேற்சொன்ன போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு விமானப் போக்குவரத்து கட்டணங்கள் உயர்வு, போட்டிகளுக்கு முன்னேற்பாடு பணிகளான விவாதங்களை தட்டச்சு செய்தல், அதன் நகல்கள் எடுத்தல் மற்றும் அதனைப் புத்தகமாக தயாரித்தல் ஆகிய பணிகளைச் செய்வதற்கான கூடுதல் செலவு, தங்குமிடங்கள் மற்றும் உணவு பொருட்களின் விலையேற்றம் காரணமாக கூடுதல் செலவினங்கள் ஏற்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

3. சட்டக்கல்வி இயக்குநர் மேலும் தனது கடிதத்தில், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள், ஹாங்காங்கில் நடைபெற உள்ள போட்டியில் கலந்து கொள்ளத் தேவையான செலவுத் தொகை மூன்று மாணவர்களுக்கு மொத்தம் ரூ.5,19,000/– (பதிவுக் கட்டணம் உட்பட) மற்றும் வியன்னாவில் நடைபெறவுள்ள மாதிரி நீதிமன்ற போட்டிகளில் கலந்து கொள்ளத் தேவையான செலவுத் தொகை நான்கு மாணவர்களுக்கு மொத்தம் ரூ.8,42,000/– (பதிவுக் கட்டணம் உட்பட) ஆக மொத்தம்

7 மாணவர்களுக்கு ஆகும் மொத்த செலவு ரூ.13,61,000/–ஐ (ரூபாய் பதிமூன்று இலட்சத்து அறுபத்தோராயிரம் மட்டும்) அரசு நிதியுதவியாக வழங்கிடுவது தொடர்பாக பரிசீலித்து ஆணை பிறப்பிக்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. சட்டக்கல்வி இயக்குநரின் கோரிக்கையினை கவனமுடன் பரிசீலித்த அரசு, அதனை ஏற்று, பன்னாட்டு மாதிரி நீதிமன்றப் போட்டிகளில், கலந்துகொள்ளும் 7 மாணவர்களுக்கு ஏற்படும் செலவினங்களின் உயர்வினைக் கருத்தில் கொண்டு, அரசின் நிதியுதவியாக மாணவர் ஒருவருக்கு வழங்கப்பட்டு வந்த தொகை ரூ.75,000/– என்பதனை, ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஆக உயர்த்தி ஆணையிடுகிறது. மேலும் 2017–2018–ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெறவுள்ள பன்னாட்டு மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்து கொள்ள உள்ள பின்வரும் 7 மாணவர்களுக்கு தலா ரூ.1,00,000/– வீதம் மொத்தம் ரூ.7,00,000/– (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) அரசின் நிதியுதவியாக வழங்கியும் ஆணையிடுகிறது:-

| வ.எண் | மாணவர்களின் பெயர்கள் | வகுப்பு |
|---|---|---|
| 1 | நாசீர் உசேன். என்.ஏ | 2 ஆம் ஆண்டு பி.ஏ.எல்.எல்.பி. |
| 2 | நரேன் சுவாமிநாதன் | 2 ஆம் ஆண்டு பி.ஏ.எல்.எல்.பி. |
| 3 | ஹேமலதா. ட்டி | 5ஆம் ஆண்டு பி.ஏ.பி.எல். |
| 4 | வருண் குமார். எஸ். ஆர் | 5ஆம் ஆண்டு பி.ஏ.பி.எல். |
| 5 | கிரிஷ். எஸ் | எல்.எல்.பி. |
| 6 | உத்ரா. வி.வி | 4ஆம் ஆண்டு பி.ஏ.பி.எல். |
| 7 | நமீதா தாமஸ் | 2 ஆம் ஆண்டு பி.ஏ.எல்.எல்.பி. |

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2202 – பொதுக்கல்வி – 03 பல்கலைக்கழக கல்வியும் உயர்கல்வியும் – 103 அரசுக் கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் – மாநிலச் செலவினங்கள் – AE சட்டக் கல்லூரிகள் – 09 உதவித் தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித்தொகை (த.தொ.கு. 2202–03–103–AE–0914)".

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்களுக்கு 2017–2018–ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.5,25,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதலாகத் தேவைப்படும் தொகை ரூ.1,75,000/–, 2017–2018–ஆம் ஆண்டுக்கான இறுதி திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 4–இல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ள கூடுதல் தொகையினை மேற்சொன்ன மாணவர்களுக்கு பெற்று வழங்கிட சட்டக் கல்வி இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட கூடுதல் செலவினம் ரூ.1,75,000/– க்கான உரிய கருத்துருவை 2017–2018–ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த மதிப்பீட்டில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (உள்–II)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு சட்டக் கல்வி இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேற்சொன்ன மாணவர்களுக்கு உரிய தொகையினை பெற்று வழங்கியபின், அம்மாணவர்கள் போட்டிக்குச் சென்று வந்த பிறகு அவர்களிடமிருந்து செலவுச் சீட்டு பெற்று, பட்டியை (Bills) சரிசெய்யுமாறும் சட்டக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், அம்மாணவர்கள் போட்டியில் கலந்துகொண்டு இந்தியா திரும்பிய பிறகு அப்போட்டியின் உபயோகம் குறித்தான அறிக்கையினைப் பெற்று அரசுக்கு அனுப்பி வைக்குமாறு சட்டக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாராக் குறிப்பு எண்.5436/உள்–II/2018, நாள் 19.02.2018–இல் பெற்ற ஒப்புதல் மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேட்டு எண்.2744 (இரண்டாயிரத்து எழுநூற்று நாற்பத்து நான்கு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.ச.பூவலிங்கம்,
அரசு செயலாளர்.

பெறுநர்:

1. சட்டக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010.
2. முதல்வர், டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை – 600 104. (சட்டக்கல்வி இயக்குநர் வழியாக)
3. தனி நபர்கள் (சட்டக் கல்வி இயக்குநர் வழியாக).
4. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 600 104/600 035.

நகல்:

1. நிதி (உள்II/வ.செ.பொது–II)த்துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
2. மாநில கணக்காய்வாளர், சென்னை – 600 018 / 600 035.
3. இருப்பிட தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

இருப்பு கோப்பு/ உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

பே.க
19/2/18